<u>தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவாரூர்</u>

<u>MCOP. No.74/2025</u>

RW : 1

2026 ஆம் ஆண்டு ஜீலை மாதம் 15 ம் தேதி ஆணையுறுதி சட்டம் 1969 பிரிவு 4ன் படி திருமதி. Dr. R. லதா, M.A., M.L., Ph.D., தலைமை நீதித்துறை நடுவர், திருவாரூர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. ஃப்பெரடிக்ஸ் | த/ பெ. | : | திரு. ஆனந்தராயன் |
| கிராமம் | : | தஞ்சாவூர் | தாலுக்கா | : | தஞ்சாவூர் |
| தொழில் | : | உதவி மேலாளர் | வயது | : | 32 |

<u>15.07.2026</u>

<u>முதல் விசாரணை</u>

நான் இந்த மனுவில் 2 ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் உதவி மேலாளராக பணிபுரிகிறேன். நான் 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் எதிர்மனுதாரர் சாட்சி 1 ஆக சாட்சியமளிக்கிறேன். எனது தரப்பில் எழுத்துமூல நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது. அதில் சொல்லப்பட்ட சங்கதிகள் உண்மையானவை. அவை என்னால் வழக்கறிஞருக்கு சொல்லப்பட்டது. அவை உண்மையானவை. எனது தரப்பில் ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

1) 17.11.2025 ஆம் தேதியிட்ட எங்கள் நிறுவன **ஆராய்வாளர் அறிக்கையும், அதனுடன் இணைக்கப்பட்டுள்ள ஆவணங்களும் அசல் எ.ம.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2)12.11.2025 ஆம் தேதியிட்ட **குற்ற எண்.95/2025 ல் தாக்கல் செய்யப்பட்ட சம்பவ வரைப்படம் கணினி நகல் எ.ம.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**என் சாட்சியத்தை ஏற்று இம்மனுவை தள்ளுபடி செய்ய கேட்டுக்கொள்கிறேன்.**

<u>மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை</u>

நான் அலுவலக ஆவணங்களின் அடிப்படையில் தான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். விபத்து சமயம் 1 ம் எதிர்மனுதாரரின் வாகனம் எங்கள் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1 ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநருக்கு எதிராக தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆராய்வாளர் அறிக்கையில் விபத்திற்கு

காரணம் 1 ம் எதிர்மனுதாரரின் வாகனமாக எங்கள் நிறுவனத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள வாகன ஓட்டுநருக்கு எதிராக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் குற்றவாளி பெயர் குறிப்பிடப்படவில்லை.

எங்கள் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ள வாகனம் தான் விபத்திற்கு காரணம் என்பதால் இழப்பீடு தொகையை எங்கள் நிறுவனம் கொடுக்க வேண்டும் என்றால் சரியல்ல.

சாட்சி கூறியதை என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

LATHA Digitally signed by LATHA
Date: 2026.07.15 17:56:21 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,

திருவாரூர்